**DEPOSITION OF WITNESS**

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No.161/2022**

**Prosecution Witness - PW8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. புவனேஸ் ஷாம் குமார் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.02.2026

(Accused is present.)

முதல் விசாரணை–

நான் தற்பொழுது மண்டைக்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகின்றேன். மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் 13.03.2020 ம் தேதி தலைமைக் காவலராக பணியில் இருந்த போது, மணவாளக்குறிச்சி காவல் நிலைய கு. எண். 24/2020 u/s 4(1)(i) 4(1)(A) TNP Act வழக்கின் சொத்துக்களை இரணியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் R.P.No.72/2020 வழக்கு சொத்துக்களான 180 மி.லி 2 பாட்டில்களை வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருநெல்வேலி, கொண்டு ஒப்படைத்து வந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படுவது, அதற்காக நான் நீதிமன்றத்திலிருந்து பெற்ற கடிதம் அது அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கைப்பற்றப்பட்ட பொருள்களை காவல் ஆய்வாளர், காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கொடுத்தார் என்றால், சரிதான். அது 180 மி.லி பிடிக்கக் கூடிய 2 பாட்டில்கள் என்றால், சரிதான். அந்த 2 பாட்டில்களின் மூடிகளும் ஏற்கனவே திறக்கப்பட்டு, பின்னர் Seal வைக்கப்பட்டவை என்றால், சரிதான். என்னிடம் பாட்டில்களை ஒப்படைத்த நேரம் எனக்கு நினைவில் இல்லை. நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,

**இரணியல்.**